**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.15/2023 C/W.18/2023**

Deposition of witness for **PW2** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Gayathiri | Husband Name | : | Venkatraj |
| Village | : | | Age | : | |

**நாள்:12.02.2026.**

**ம.சா.2. முதல் விசாரணை தொடர்ச்சி (மனுவின்பேரில்) :**

நான் இந்த மனுவில் ஏற்கனவே எனது தரப்பில் ம.சா.2 ஆக இருந்து முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் **ம.த.சா.ஆ.11** முதல் **ம.த.சா.ஆ.15** வரையிலான சான்றாவணங்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டு உள்ளது. மேலும் எனது தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டதின்பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி நடைபெறுகிறது. எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டுகிறேன்.

| S.No | Exhibits | Description |
|---|---|---|
| 1 | ம.த.சா.ஆ.16 | காவேரி மருத்துவமனையின் மருத்துவ பில்கள் ரூ.67,140/- |
| 2 | ம.த.சா.ஆ.17 | 22.08.2023 ம் தேதியிட்ட காவேரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று அசல் |
| 3 | ம.த.சா.ஆ.18 | 16.08.2021 ம் தேதியிட்ட கெலமங்கலம் அரசு மருத்துவமனையின் AR Copy அசல் |
| 4 | ம.த.சா.ஆ.19 | 13.02.2022 ம் தேதியிட்ட ஓசூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று அசல் |
| 5 | ம.த.சா.ஆ.20 | 07.08.2021 ம் தேதியிட்ட லட்சுமி நரசிம்மா என்டர்பிரைசஸ் ஜீலை மாத சம்பள பட்டியல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில்**

விபத்து எப்போது நடைபெற்றது என்றால் **16.08.2021** ம் தேதி நடைபெற்றது. விபத்துநடந்த உடன் முதலில் கெலமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அதன் பிறகு ஓசூர் அரசு மருத்துவமனைக்கு **8** மணிக்கு மேல் சிகிச்சைக்கு சென்றேன். அதற்கு பிறகு காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அதற்கு பிறகு ராடு எடுப்பதற்கு ஓசூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். காவேரி மருத்துவமனையில் **6** நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். அங்கு எனக்கு அறுவை சிகிச்சை

செய்து ராடு வைத்தார்கள். அந்த ராடை ஓசூர் அரசு மருத்துவமனையில் எடுத்துவிட்டேன் என்றால் சரிதான். ராடு எடுப்பதற்கு முன்பு கிருஷ்ணகிரி மருத்துவ குழுமத்திற்கு சென்றேன். அங்கு எனக்கு ஏற்பட்ட ஊனத்திற்கு 35% ஊனம் உள்ளது என்று சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள் என்றால் சரிதான். ராடு எனக்கு எடுக்கப்பட்டுவிட்டதாலும், நான் நன்றாக இருப்பதாலும், ராடு இருக்கும் போது கொடுத்த ஊன சான்றிதழை தற்போது கணக்கில் எடுத்துகொள்ள கூடாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனைபில்களை மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்து நிருப்பித்தால் எனக்கு கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. நான் ரத்திணா பேக்கேஜஸ் ல் வேலைக்கு சென்று 11 வருடங்கள் ஆகிறது. நான் தாக்கல் செய்துள்ள வருமான பட்டியல் ஜீலை மாதம் 2021 ஆண்டுக்கு உரிய சம்பள பட்டியல் என்றால் சரிதான். விபத்திற்கு பின்பும் நான் வேலைக்கு சென்று வருவதால் தான் 2021 ஜீலைக்கு பிறகு உண்டான சம்பளபட்டியலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வேலைக்கு போகவில்லை என்றால் எனது கம்பெனியை நான் விசாரித்தும், எனது வங்ககி கணக்கை தாக்கல் செய்தும் நான் நிருப்பித்திருப்பேன் என்றும் அவ்வாறு நான் தாக்கல் செய்யாததால் வேலைக்கு சென்று வருவதாகவும், மனுவிற்காக வேலைக்கு செல்லவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எவ்வளவு சம்பளம் வாங்குகிறேன் என்றால் லீவு எடுக்காமல் சென்றால் ரூ.20,000 வாங்குவேன். முன்பை விட நான் அதிமாக சம்பளம் வாங்குவதால் எனக்கு வருமான இழப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.